தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## தென் தமிழகத்தில் மழை வாய்ப்பு

தென் மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி சற்று நகர்ந்துள்ளது. இது இப்போது இலங்கைக்கு அருகில் நிலை கொண்டுள்ளது. இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியின் காரணமாக வியாழக்கிழமை தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வேலூர் மத்திய சிறை வளாகத்தில் கைதிகள் பயிரிட்ட நிலக்கடலை அறுவடை

வேலூர் மத்திய ஆண்கள் சிறை வளாகத்தில் பயிரிடப்பட்ட புதியரக வீரிய நிலக்கடலை அறுவடை புதன்கிழமை தொடங்கியது. இதை பாபா அணு ஆராய்ச்சி நடுவத்தின் விஞ்ஞானி டேனியல் செல்லப்பா பார்வையிட்டார். சிறை சுற்றுச் சுவரையொட்டி சுமார் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில், நன்னடத்தை சிறைக் கைதிகள் மூலம் நிலக்கடலை பயிரிடுவதற்கான ஏற்பாடுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் செய்யப்பட்டன. டிஜி.37.ஏ என்ற வீரிய ரக நிலக்கடலையை பரிட்சார்த்தமாக பயிரிட முடிவு செய்யப்பட்டது. இந்த நிலக்கடலையைக் கண்டறிந்த மும்பை பாபா அணு ஆராய்ச்சி நடுவம் இதற்கு உதவிபுரிய முன்வந்தது. அதையடுத்து ஆகஸ்ட் மாதம் நடுவத்தின் விஞ்ஞானிகள் சிறை வளாகத்தில் நிலக்கடலை பயிரிட தேர்வு செய்யப்பட்ட இடத்தை பார்வையிட்டு, அதை சீர்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளச் செய்தனர். அதைத் தொடர்ந்து நிலக்கடலை பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாரானது. இதையடுத்து புதன்கிழமை நிலக்கடலை அறுவடையை நடுவத்தின் முதுநிலை விஞ்ஞானி டேனியல் செல்லப்பா தொடங்கி

வைத்தார். வேலூர் மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் க்ரீஷ் சந்திரசிங், சிறை கண்காணிப்பாளர் கருப்பண்ணன் உள்ளிட்டோர் அறுவடை பணிகளை பார்வையிட்டனர்.

## விவசாயிகள் கொண்டாட்டம்

வாடிப்பட்டி பெரியாறு பாசன கால்வாய் சங்கம் பி.டி.4 சார்பாக ஆண்டிபட்டி பங்களாவில் முல்லைப் பெரியாறு அணையில் 142அடி நீர்மட்டம் உயர்ந்ததையொட்டி பென்னிகுவிக் படத்திற்கு மாலை அணிவித்து பட்டாசுவெடித்து பொங்கல் வைத்து கொண்டாடினர். இந்த விழாவிற்கு சங்கத் தலைவர் தேவராஜ் தலைமை வகித்தார். வைகை பெரியாறு பாசன வடிகால் கோட்ட உதவி பொறியாளர்கள் மோகன்குமார், ராமச்சந்திரன், வட்டாட்சியர் இராம.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் கட்டக்குளம் ராமசாமி வரவேற்றார். இதில் விவசாய சங்க நிர்வாகிகள் கணேசன், அம்பிகைஜெயராமன், கோவிந்தன், கருப்பையா, பால்பாண்டியன், நடராஜன், ஆர்.கே.செல்வராஜ், கலைவாணன், ராஜேந்திரன், மனோகரன், சீத்தாராமன் உள்பட ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர். பெரியாறு அணையில் 142 அடிக்கு நீர்தேக்க நடவடிக்கை மேற்கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்த விவசாயிகள், விரைவில் 152 அடிக்கு தண்ணீரைத் தேக்க நடவடிக்கை எடுக்கவும்வலியுறுத்தினர்.

## விவசாயிகள் இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும்: வேளாண்மை இணை இயக்குநர்

விவசாயிகள் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையில், நிலங்களில் இயற்கை உரங்களை பயன்படுத்த முன்வர வேண்டும் என, திண்டுக்கல் வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் அறிவுறுத்தினார். பழனி-திண்டுக்கல் சாலையில், ராயல் பார்க் வளாகத்தில் புதன்கிழமை வேளாண் துறை

சார்பில், நெல்சாகுபடி குறித்த தொழில்நுட்பக் கருத்தரங்கம் நடைபெற்றது. கேரள மாநிலம், திருவாங்கூர் பாக்ட் உர நிறுவனம் இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சிக்கு, திண்டுக்கல் பாக்ட் விற்பனை அலுவலர் ஹூசைன் வரவேற்புரை வழங்கினார். வேளாண்மைத் துறை திட்டம் பற்றி பழனி வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி, வேளாண்மையில் இயற்கை மற்றும் உரங்களின் பங்கு பற்றி திண்டுக்கல் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) ரவிச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். கோவை பாக்ட் முதுநிலை மண்டல மேலாளர் சுப்பிரமணியன், பழனி வேளாண்மை அலுவலர் கணேசன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்கில், திருந்திய நெல் சாகுபடி, சான்று பெற்ற விதை உபயோகப்படுத்துதல், 4 நாள் நாற்று நடவு நடுதல், கோனோ வீடர் கருவி மூலம் களை எடுத்தல், இலை வண்ண அட்டை பயன்படுத்தி மேலுரம் இடுதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் குறித்து, வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் கார்த்திகேயன், பாரதி உள்ளிட்டோர் விளக்கினர். திண்டுக்கல் வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் பேசியது: விவசாயிகள் தேவைக்கு உரம் இடவேண்டுமே தவிர, மனதிருப்திக்கு உரம் இடக்கூடாது. இதனால் மண் வளம் கெடும். மண் ஆய்வு அவசியம். தழை, மணி, சாம்பல் சத்துக்கு, முந்தைய காலங்களில் பெரியவர்கள் பயன்படுத்திய இயற்கை உரங்களையே பயன்படுத்த வேண்டும். உரத்தைப் பயன் படுத்துவதால், சாகுபடி செலவு, சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதோடு, பல்வேறு நோய்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது. திருந்திய நெல் சாகுபடி தற்போது நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்தியாவிலேயே உரம் அதிகமாக பயன் படுத்தும் மாநிலத்தில் இரண்டாவது இடத்தை தமிழகம் பிடித்துள்ளது என்றார். நிகழ்ச்சியில், நெய்க்காரபட்டி, கணக்கன்பட்டி, பாலசமுத்திரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள்

பங்கேற்றனர். வேளாண் துறை துணை வேளாண்மை அலுவலர் துரைச்சாமி, உதவி அலுவலர் செல்லச்சாமி, ராஜாசேட், சசிக்குமார், கோசல்நாத், மணிகண்டராஜா, சரவணகுமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு கால்நடை மருத்துவமனை மற்றும் துணை மருந்தகங்களில் வரும் 28, 29 ஆகிய தேதிகளில், ஆடுகளுக்கு குடற்புழு சிகிச்சை நீக்க மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. அரசு விலையில்லா ஆடுகள் திட்டத்தின் கீழ், ஆடுகள் பெற்ற பயனாளிகள் மற்றும் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தங்களது ஆடுகளை முகாமுக்கு கொண்டு வந்து குடற்புழு நீக்க சிகிச்சை பெறலாம். வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதால், ஆடுகளின் எடை அதிகரிக்கிறது என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்தார்.

**கிருஷ்ணகிரியில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை (நவ.28) விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து, கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை (நவ.28) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்வலிக் கிழங்கு சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மானியம்

அரியலூர் மாவட்டத்தில் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்து மானியம் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் செந்துறை, தா.பழூர், ஜயங்கொண்டம், ஆண்டிமடம் ஆகிய வட்டாரங்களில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் கண்வலிக்கிழங்கு என்ற மூலிகைப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கண்வலிக்கிழங்கு விதையில் இருந்து எடுக்கப்படும் கொலிச்சிசின் (இர்ப்ஹீட்ண்ஹீட்ண்ய்ங்ள்) எனும் அல்கலாய்டு தற்போது அனைத்து வகையான ஆயுர்வேத மற்றும் யுனானி முறையில் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகிறது.அதிக மருத்துவ குணம் கொண்ட இந்தப் பயிர் மிகவும் மென்மையான தண்டை கொண்ட கொடிவகையைச் சேர்ந்தது. இப்பயிரை ஒவ்வொரு வருடமும் பயிரிடுவதற்கும், பயிரிடும் போது புதிதாக ஊன்றுகோல் கட்டுவதற்கும், இப்பயிரின் மலர்களுக்கு மகரந்தச் சேர்க்கை செய்வதற்கும் தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டத்தின் கீழ், கண்வலிக் கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 50 சதவீதம் மானியமாக ரூ. 68,750 வழங்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்துக்கு 2014-15 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தில் 100 ஹெக்டேருக்கு ரூ. 68.75 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே, அரியலூர் மாவட்டத்தில் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், புகைப்படம் மற்றும் தேசிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தின் முன்பக்க நகல் ஆகியவற்றுடன் தங்கள் வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு, தங்கள் பெயரை முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

## நெற்பயிரில் இலை சுருட்டுப் புழு தாக்குதல்

நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக நிலவி வந்த மந்தமான வானிலை புதன்கிழமையும் தொடர்ந்தது. இந்த நிலையில், சம்பா நெற்பயிரில் இலைச் சுருட்டுப் புழுத் தாக்குதல் அதிகரித்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தென்மேற்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி இந்தியப் பெருங்கடலில் மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக வேதாரண்யம் பகுதியில் கடந்த இரு நாட்களாக மந்தமான வானிலை நிலவியது. அவ்வப்போது லேசான சாரல் காற்றுடன் பனித் துளியைப் போல சாரல் ஏற்பட்டு வருகிறது. நெற் பயிரில் பூச்சி தாக்குதல்: இந்த நிலையில், சம்பா நெற் பயிரில் பூச்சித் தாக்குதல் ஏற்பட்டு வருகிறது. வானிலை சாதகமாக உள்ளதால் பூச்சித் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதுகுறித்து வேதாரண்யம் வேளாண் இயக்குநர் தெரிவித்தது: தற்போது நெற் பயிரில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்கம் அதிகம் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த பிரப்பனப்பாஸ் மருந்தை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளவில் 400 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். தழைச்சத்து உரங்களை அளவுக்கு அதிகமாக தெளிக்கக் கூடாது என தெரிவித்துள்ளார்.

## தோவாளை சந்தையில் பூக்கள் விலை உயர்வு

தோவாளை பூ சந்தையில் புதன்கிழமை மல்லி, பிச்சி பூக்களின் விலை உயர்ந்து, மல்லி பூ கிலோ ரூ. 1,400-க்கும், பிச்சி பூ கிலோ ரூ. 600-க்கும் விற்பனையானது. தற்போது மழைக்காலம் என்பதால், பூக்கள் உற்பத்தி குறைந்ததே இந்த விலை ஏற்றத்துக்கு காரணம் என்றும், தொடர்ந்து முகூர்த்த நாள் மட்டுமன்றி கார்த்திகை மாதம் ஐயப்பன் கோயில் செல்ல பக்தர்கள் மாலை அணிந்து விரதம் இருப்பதால் இந்த விலை உயர்வு தொடர்ந்து இருக்கும் என்றும் பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

சந்தையில் கேந்தி கிலோ ரூ. 70, பட்டன்ரோஸ் ரூ.70, அரளி ரூ. 170, சம்பங்கி ரூ. 50, வாடாமல்லி ரூ. 50-க்கு விற்பனையானது.

இன்றைய வேளாண் செய்திகள்

**பயறு பயிரிடும் விவசாயிகளா? விதை பரிசோதனை செய்யுங்கள்**

திருவள்ளூர்: பயறு வகை பயிர்களை பயிரிடுவதற்கு முன் விவசாயிகள், அதன் முளைப்புத் திறனை பரிசோதனை செய்து கொள்ளுமாறு, வேளாண் அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். திருவள்ளூர் மாவட்டத்தில் நவம்பர், டிசம்பர் மாதத்தில் பச்சை பயறு, உளுந்து, காராமணி போன்ற பயறு வகைகளை விவசாயிகள் ஆர்வமாக பயிரிடுகின்றனர். விதையின் முளைப்புத் திறன், 75 சதவீதம் இருந்தால் மட்டுமே, அதிக மகசூல் கிடைக்கும். எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள, விதையினை, திருவள்ளூர், பெரியகுப்பத்தில் இயங்கி வரும் வேளாண் விதை பரிசோதனை ஆய்வகத்தில் அளித்து, விதையின் முளைப்பு திறனை அறிந்து கொள்ளலாம்.இதற்காக, ஒரு கிலோ விதை மாதிரியை, 30 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். எட்டு நாட்களில் பரிசோதனை முடிவுகள் வழங்கப்படும், என, மாவட்ட விதை பரிசோதனை வேளாண் அலுவலர் ஞானசேகரன் தெரிவித்து உள்ளார்.

**உரங்களின் விலை அதிகரிப்பு: தேவைக்கேற்ப பயன்படுத்த துணை இயக்குனர் அறிவுறுத்தல்**

பழநி: திண்டுக்கல் மாவட்ட வேளாண்துறை, கோவை பாக்ட் உர நிறுவனம் சார்பில் பழநியில் நெல்சாகுபடியில் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.மாவட்ட வேளாண் துணை இயக்குனர் சம்பத்குமார் தலைமைவகித்தார். கோவை பாக்ட் உரநிறுவன முதுநிலை மண்டல மேலாளர் சுப்பிரமணியன் முன்னிலைவகித்தார். வேளாண் துணை

இயக்குனர் பேசியதாவது: "தென்மேற்கு பருவமழை பொய்த்த போதும் வடகிழக்கு பருவமழை கைகொடுத்துள்ளது. 5 ஆண்டுகளில் உரங்களின் விலை பலமடங்கு அதிகரித்து விட்டது. இந்தியாவில் அதிகமாக உரம் பயன்படுத்தும் மாநிலங்களில் தமிழகம் இரண்டாமிடத்தில் உள்ளது. அதேசமயம் நீர்வளஆதாரத்தில் கடைசியில் இருந்து இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளது. விளைநிலங்களில் அதிகமாக ரசாயன உரங்கள், பூச்சிமருந்துகளை பயன்படுத்துவதால் நிலம் பாழாகி, சுற்றுச்சுழலும் பாதிக்கப்படுகிறது. விவசாயிகள் மன திருப்திக்காக உரமிடக் கூடாது. மண்ஆய்வு செய்து தேவைக்கு ஏற்ப உரமிட வேண்டும். 40 எக்டேரில் பசுந்தாள் உரம் உற்பத்தி செய்து அதில் 20 டன் வரை கொள்முதல் செய்து மானியவிலையில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் செயல்படுத்தபட உள்ளது. விவசாயிகள் நவீன திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் அதிக மகசூல் பெறலாம்,' என்றார். மாவட்ட தரக்கட்டுபாட்டு உதவி இயக்குனர் ரவிச்சந்திரன், பழநி உதவிஇயக்குனர் சாந்தாமணி, வாகரை மக்காசோள ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் கார்த்திகேயன் பங்கேற்றனர்.

**<u>காலிபிளவர் சாகுபடி செய்த விவசாயிகள்...பாதிப்பு.. நூல்புழு தாக்குதலால் விளைச்சல் குறைவு</u>**

தேனி,: அறுவடை செய்யும் நேரத்தில் காலிபிளவர் செடியில் நூல் புழு தாக்குதலால் விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. தேனி, குச்சனூர், ஆண்டிபட்டி, கோட்டூர், சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் 300 ஏக்கர் பரப்பில் காலிபிளவர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நவ., டிச., மாதங்களில் ஐயப்பன் கோயில் சீசன் இருப்பதால் காய்கறிகளுக்கு தேவை அதிகம் இருக்கும், விலை அதிகம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் கடந்த செப்டம்பரில் விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்தனர். தற்போது காலிபிளவர் பறிப்பு நிலைக்கு வந்துள்ளது.இந்த முறை நல்ல லாபம் கிடைக்கும் என நினைத்த

விவசாயிகளுக்கு தற்போது ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. சில வாரங்களாக பெய்த மழை, குளிர்ந்த தட்ப வெப்ப நிலை போன்ற காரணங்களால் பறிப்பு சமயத்தில் காலிபிளவர் செடியில் நூல்புழு தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இது அனைத்து செடிகளுக்கும் பரவி நோய் தாக்கி இலைகளில் துவாரம் ஏற்பட்டுள்ளது. வழக்கமாக அதிக எடையுடன் உருவாகும் காலிபிளவர் இந்த முறை சிறியஅளவில் காணப்படுகிறது. எடை குறைவாக இருப்பதால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டு காலிபிளவர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு முதலீடு செய்த பணம் கிடைத்தாலே போதும் என்ற நிலையில் உள்ளனர்.அரப்படிதேவன்பட்டி விவசாயி டி.கோட்டைசாமி கூறியதாவது: ஒட்டன்சத்திரத்தில் 10 ஆயிரம் நாற்றுகள் இரண்டாயிரம் ரூபாய்கு வாங்கி நடவு செய்தோம். கடந்த எட்டு நாட்களுக்கு முன்னதாக நோய் தாக்கியதால் காலிபிளவர் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. உரம், பூச்சி மருந்து வேலை ஆட்கள் கூலி ஆகியவை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. ஆனால் எங்கள் விளை பொருட்களில் விலை மட்டும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கிறது. 20 காலிபிளவர் பூ 200 ரூபாய்க்கு விவசாயிகள் கொள்முதல் செய்கின்றனர்.இப்படி இருந்தால் விவசாயிகள் எப்படி வாழ முடியும்.நோய் தாக்குதல் ஏற்படும் போது விவசாய, தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு உரிய ஆலோசனை வழங்க வேண்டும், என்றார்.

**<u>பயிர் காப்பீட்டிற்குகடைசி நாள்</u>**

சிவகங்கை:சிவகங்கை மாவட்டத்தில் தற்போது 65 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி நடந்துள்ளது. இயற்கை சீற்றங்களால் நெற் பயிரை பாதுகாக்க காப்பீடு செய்வது அவசியம். இந்த ஆண்டு தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு சிறு,குறு விவசாயிகள் ரூ.115.20ம், இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.128ம் கட்டினால் மட்டும் போதும். கடன் பெற

விருக்கும் விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர்களிடம் அடங்கல் பெற்று தொடக்க கூட்டுறவு சங்கங்களை அணுகி வரும் 30ம் தேதி வரை காப்பீடு செய்து பயனடையலாம்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**சர்வதேச அளவில் பருத்தி விற்பனையில் மந்தம்**



புதுடெல்லி: நடப்பு சீசனில் (2014-2015) சர்வதேச அளவில் பருத்தி வர்த்தக பரிவர்த்தனை 11 சதவீதம் சரிந்து 7.9 மில்லியன் டன் அளவில் தான் இருக்கும் என்று, 'சர்வதேச பருத்தி ஆலோசனை குழு' (ஐசிஏசி) தெரிவித்துள்ளது. பருத்தியை அதிகளவில் பயன்படுத்தும் சீனாவிடம் இருந்து மந்தமான வரவேற்புள்ளதே இதற்கு காரணமாகும் என்றும் ஐசிஏசி தனது அறிக்கையில் சுட்டிகாட்டியுள்ளது.

**வத்தல்மலையில் 86.67 ஏக்கரில் ரூ10 கோடியில் தாவரவியல் பூங்கா**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம், வத்தல்மலையில் 86.67 ஏக்கரில் தாவரவியல் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வத்தல்மலையில் ஆய்வு மேற்கொண்ட வேளாண்மைத்துறை அமைச்சர் கிருஷ்ணமூர்த்தி, உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் ஆகியோர் தெரிவித்தனர். தர்மபுரி வத்தல்மலை சின்னங்காடு, ஒன்றியங்காடு, பால்சிலம்பு, மண்ணாங்குழி படகுத்துறை, பெரியூர் ஆகிய இடங்களை வேளா ண்மைத்துறை அமைச்சர் கிருஷ்ணமூர்த்தி, உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் ஆகியோர் ஆய்வு செய் தனர். அப்போது, பொதுமக்களிடம்

இருந்து கோரிக் கை மனுக்கள் பெற் றனர். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கிருஷ்ணமூர்த்தி, பழனியப் பன் ஆகியோர் பேசியது: தர்மபுரி மாவட்டம், வத்தல்மலையில் சுமார் 86.67 ஏக்கர் பரப்பளவில் அரசு தாவரவியல் பூங்கா அமைக்க 2012 நவம்பர் மாதம் மாவட்ட கலெக்டர்களின் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் வத்தல்மலையில் தாவரவியல் பூங்கா முதற்கட்டமாக 25 ஏக்கரில் அமைத் திட ரூ10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்ப ட்டு வருகிறது. தர்மபுரி பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் இதுபோன்ற தாவரவியல் பூங்காக்கள் அமைப்பதன் மூலம் இப்பகுதி மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இம்மாவட்டம் சுற்றுலாத்துறையில் முக்கியத்துவம் பெறும். பொருளாதாரமும் உயர்ந்திட வாய்ப்பு ஏற்படும். இந்த தாவரவியல் பூங்கா மற்ற மாவட்டத்தில் உள்ள தாவரவியல் பூங்காக்களிலிருந்து மாறுபட்டு சிறப்பினமாக விளங்க, சிறுவர் பூங்கா, இத்தாலியன் பூங்கா, ஜப்பானிய வகை பூங்கா, நீருற்று பூங்கா, அழகிய சிலை அமைப்பு பூங்கா, மலர்கள் பூங்கா, இயற்கை பூங்கா, உட்கட்டமைப்பு பூங்கா, அல்லி பூங்கா, பொழுதுபோக்கு பூங்கா என 10 வகையான பூங்காக்கள் பொதுமக்களை கவரும் வண்ணம் அமைக்கப்படவுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தை காண வரும் அனைத்து பார்வையாளர்கள் மற்றும் பக்கத்து மாவட்டங்களில் உள்ள மக்களையும் கவர்ந்தி ழுக்கும் வகையில் வத்தல்மலை மிக சிறந்த சுற்றுலாதலமாக அமைக்கப் படும். இதை காண வரும் மக்களுக்காக அழகான குளம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. செங்குத்தாக இருக்கும் கொண் டைஊசி வளைவில் உள்ள சாலை களை சீரமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில், பணி மேற்கொள்ளப்படும். பால்சிலம்பு சுந்தரஅள்ளி சாலை, காணிகரம்பு சாலை விரைவில் அமைக்கப்படும். இவ்வாறு அமைச்சர்கள் பேசினர். நிகழ்ச்சியில், முன்னதாக பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட

சின்னாங்காடு, கொண்டகாரஅள்ளி, ரெட் டியூர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து மருத்துவமனை வசதி, சாலைவசதி, தடுப்புவேலி, திருமண மண்டபம் உள்ளி ட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை அமைச்சர்கள் பெற்றுக்கொண்டனர். மனுக்கள் மீது பரிசீலனை மேற்கொ ண்டு தகுதியான மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு உதவி கள் வழங்கப்படும் என்றனர். இந்த ஆய்வின் போது மாவட்ட கலெக்டர் விவேகானந்தன், தோட்டக்கலைத்துறை இயக்குநர் சித்ரசேனன், பாலக்கோடு எம்எல்ஏ அன்பழகன், மாநில பட்டுஉற்பத்தியாளர் கள் கூட்டுறவு சங்க தலைவர் மணிவண்ணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் (பொ) நாகராசன், நல்லம்பள்ளி ஒன்றியக்குழுத்தலைவர் முனுசாமி, முன்னாள் பால்வளத்தலைவர் ராஜேந்திரன், அண்ணா தொழிற்சங்க செயலாளர் பழனிசாமி, நிலவள வங்கி தலைவர் ரவி ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் வரத்து அதிகரிப்பு ரூ.14.20 லட்சத்திற்கு விற்பனை</u>

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த நடந்த மஞ்சள் ஏலத்திற்கு 233 குவின்டால் விற்பனைக்கு வந்தது. ரூ.10.39 லட்சத்திற்கு விற்பனையானது. கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள் மற்றும் வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் 169 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 64 குவின்டாலும் என மொத்தம் 233 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை ஆலாந்துறை, செம்மேடு, போளுவாம்பட்டி பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,009 முதல் ரூ.6,399 வரையும், கிழங்கு மஞ்சள்

ரூ.5,806 முதல் ரூ.6,099 வரையும் விற்றது. இதன் மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.6,150. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.5,950. ஈரோடு, கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விற்பனை மொத்த மதிப்பு ரூ.10.39 லட்சம். இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.6.14 லட்சம் அதிகமாகும். இந்த ஏலத்தில் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.150ம், கிழங்கு மஞ்சள் ரூ.250ம் அதிகரித்துள்ளது. விரலி மற்றும் கிழங்கு மஞ்சள் வரத்து 97 குவின்டால் அதிகரித்துள்ளது என்று கோவை ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சண்முகம் கூறினார்.

## தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், கேரளாவில் இருந்து தமிழகத்துக்குள் கோழிகள் மற்றும் முட்டைகளை கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளது

முதல்வர் பன்னீர்செல்வம் தலைமையில் அவசர கூட்டம்எல்லையில் பஸ், லாரி, ரயில்களில் சோதனை* மாநிலம் முழுவதும் 800 சிறப்பு குழுக்கள் அமைப்பு* பண்ணைகளில் கிருமிநாசினி தெளிக்க ஏற்பாடுசென்னை: தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், கேரளாவில் இருந்து தமிழகத்துக்குள் கோழிகள் மற்றும் முட்டைகளை கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி கொண்டுவரும் பட்சத்தில், அந்த வாகனங்களை சோதனை சாவடிகளிலேயே தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்ப வேண்டும். இதற்காக 800 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் சோதனை நடத்த உத்தரவிடப் பட்டுள்ளது. கேரள மாநிலம் ஆலப்புழை, பத்தனம்திட்டா, கோட்டயம் மாவட்டங்களில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது. ஆலப்புழையில் கடந்த சில நாட்களில் 17,000 வாத்துகள் இறந்துள்ளன. சேகரிக்கப்பட்ட வாத்துகளின் ரத்த மாதிரிகள் மூலம், அவை பறவைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டு இறந்துள்ளன என்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது.

அண்டை மாநிலமான கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதால், இந்நோய் தமிழகத்துக்குள் பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில், தலைமை செயலகத்தில் நேற்று அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், வைத்திலிங்கம், எடப்பாடி பழனிச்சாமி, சின்னய்யா, விஜயபாஸ்கர், தலைமை செயலாளர் மோகன் வர்கீஸ் சுங்கத், அரசு ஆலோசகர்கள் ஷீலா பாலகிருஷ்ணன், ராமானுஜம், கால்நடை பராமரிப்பு துறை செயலாளர் விஜயகுமார், மக்கள் நல்வாழ்வு துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி அரசு வெளியிட்ட அறிக்கை:1. தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் எதுவும் இல்லை. எனினும் இந்த நோய் எளிதில் பரவக்கூடியது என்பதால், கேரள மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு வரும் கோழிகள் மற்றும் கோழியினம் சம்பந்தப்பட்ட பொருட்களை மாநிலங்களுக்கு இடையிலான சோதனை சாவடிகள் மூலம் சோதனை செய்து தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்ப வேண்டும்.2. கேரள மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படும் முட்டைகள், குஞ்சு பொறிப்பதற்கான முட்டைகள், கோழியினங்கள், கோழி இறைச்சி மற்றும் அவற்றின் எரு உள்ளடக்கிய கோழியின பொருட்கள் கேரள - தமிழ்நாடு மாநில எல்லைகளில் நிறுத்தி, திருப்பி அனுப்ப கால்நடை பராமரிப்பு துறை இயக்குநர், போக்குவரத்து ஆணையர் மற்றும் வணிகவரித்துறை ஆணையர் ஆகியோர் நடவடிக்கை எடுப்பர். கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்கள் இதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவர்.3. கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு வரும் அனைத்து வாகனங்கள் மீதும் தெளிப்பான் மூலம் கிரிமிநாசினி தெளிக்கவேண்டும். மாநில எல்லையில் உள்ள சோதனை சாவடிகளில் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் இது செயல்படுத்தப்

படும். மண்டல இணை இயக்குநர்கள், சோதனை சாவடிகளில் இப்பணிக்கான குழுக்களை தயார் நிலையில் வைத்திருப்பர். இதற்கு தேவையான தெளிப்பான் மற்றும் கிருமி நாசினிகள் கால்நடை நோய் புல னாய்வு பிரிவில் போதுமான அளவு இருப்பில் உள்ளது. இப்பணிகளை சரியாக செய்யும் வகை யில் போக்குவரத்து மற்றும் காவல் துறையினர் ஒத்துழைப்பு வழங்குவர். ஊரக வளர்ச்சி துறை யிலிருந்து தேவையான பணியாளர்கள் இதற்காக அனுப்பப்படுவர். 4. அனைத்து மாவட்டங் களிலும் குறிப்பாக கேரள மாநில எல்லையை ஒட்டிய மாவட்டங்களில் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படும். 5. தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 800 விரைவு செயலாக்க குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களின் செயல்பாட்டுக்கு தேவையான சுய பாதுகாப்பு உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். 6. தடுப்பு நடவடிக்கை பணிக்கு தேவையான தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், தெளிப்பான்கள் மற்றும் கிருமி நாசினிகள் போதிய அளவில் இருப்பு உள்ளது. இவை கூடுதலாக தேவைப்பட்டால், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் அவற்றை வழங்கும்.7. சைதாப்பேட்டை மத்திய நோய் ஆய்வு கூடத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது. இதன் தொலைபேசி எண். 044-24339097, செல்போன் எண். 9445032504.8. கேரள மாநில எல்லையை ஒட்டிய மாவட்டங்களில் உள்ள கோழி சந்தைகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.9. கோழி இனங்களின் உடல்நிலை குறித்த விவரம் நாள்தோறும் பெறப்பட்டு கண்காணிக்கப்படும். 10. கேரள மாநிலத்தில் இருந்து ஒரு மாதத்திற்குள் குஞ்சு பொறிப்பதற்கான வாத்து மற்றும் கோழி முட்டைகள் பெறப் பட்டிருந்தால், அதன் விபரம் சேகரிக்கப்பட்டு, அவற்றை முழுவதுமாக அழித்து புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.11. இடம் பெயரும் பறவைகளின் நடமாட்டத்தை பறவைகள் சரணாலயங்களில் தலைமை வன

பாதுகாவலர் கண்காணிப்பார்.12. கேரள மாநிலத்தில் நோய் முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும் வரை கோழி மற்றும் கோழியினங் கள் சம்பந்தப்பட்ட பொருட்கள் ரயில் மூலம் கொண்டுவரப்படுவதை நிறுத்தும்படியும், தமிழகத்திற்குள் வரும் ரயில்களில் போதுமான அளவு கிருமிநாசினிகளை பயன்படுத்தி சுத்தம் செய்யுமாறும் தென்னக ரயில்வேயிடம் கேட்டுக் கொள்ளப்படும். கேரளத்திலிருந்து தமிழகத்திற்குள் பறவைக்காய்ச்சல் நோய் பரவாமலிருக்க, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. **ஏற்றுமதி குறையும் அபாயம்** நாமக்கல் பகுதியில் இருந்து வளைகுடா நாடுகள் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு மாதத்துக்கு 50 கோடி முட்டை சப்ளை செய்யப்பட்டு வந்தது. ஆனால், கடந்த அக்டோபரில் 21 கோடி முட்டை மட்டுமே நாமக்கல் மண்டலத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தான், பிரேசில் போன்ற நாடுகளில் இருந்து கொள்முதலை அதிகரித்ததால் இந்த பாதிப்பு ஏற்பட்டது. இந்நிலையில் தற்போதைய பறவை காய்ச்சல் பீதியால் வரும் மாதங்களில் ஏற்றுமதி மேலும் கணிசமாக குறையும் அபாயம் உள்ளது. எனவே, தமிழக உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதி பாதிக்காத வகையில் முன்கூட்டியே மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.**மருத்துவ சான்றிதழ் கேட்கிறது கேரளா**கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு பறவை காய்ச்சல் பரவாமல் தடுக்க, அங்கிருந்து தமிழக கோழிப்பண்ணைக்கு வரும் வாகனங்கள் மற்றும் வேலையாட்களை பண்ணைக்குள் அனுமதிப்பதில்லை. வாகனங்களில் மருந்துகள் தெளித்த பின்னரே அதுவும் பண்ணையின் ஒரு குறிப்பிட்ட தொலைவிற்கே அனுமதிக்கப்படுகின்றன. இந்நிலையில் கோவையை சுற்றி உள்ள பல்லடம், அன்னூர், பொள்ளாச்சி, உடுமலை பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் பறவை காய்ச்சல் பரவாமல் இருக்க மருந்து

தெளிக்கப்பட்டு வருகிறது. முட்டை வைக்க கூடிய அட்டைகளுக்கும் மருந்து தெளிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையே, தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு கறிக்கோழி மற்றும் முட்டைகள் ஏற்றி செல்லும் வாகனங்களில் பறவைக்காய்ச்சல் இல்லை என்ற மருத்துவ சான்றிதழ் இருந்தால் மட்டுமே கேரள மாநிலத்திற்குள் அனுமதிக்கப்படுகிறது. இல்லை என்றால் அவை திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றன.

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>கேரளாவில் பறவை காய்ச்சல் எதிரொலி: நாமக்கல் கோழிப்பண்ணைகளில் முன்எச்சரிக்கை நடவடிக்கை தீவிரம் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு வருகிறது</u>**



நாமக்கல், கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டு உள்ளதால், நாமக்கல் கோழிப்பண்ணைகளில் முன்எச்சரிக்கை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. குறிப்பாக பண்ணைகளில் கோழிகள் மற்றும் வாகனங்களுக்கு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு வருகிறது.
பறவைகாய்ச்சல்

கேரள மாநிலம், ஆலப்புழை மாவட்டத்தில் வாத்து பண்ணைகளில் பறவை காய்ச்சல் நோய் கிருமிகள் தாக்கி, ஆயிரக்கணக்கான வாத்துகள் இறந்து இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதையடுத்து கேரள மாநில அரசு பறவைகாய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை

மேற்கொண்டு வருகிறது. தமிழக சுகாதாரத் துறையினரும் தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு வரும் அனைத்து வாகனங்களுக்கும் சோதனை சாவடிகளில் கிருமிநாசினி தெளித்து வருகின்றனர். தமிழகத்தின் முக்கிய முட்டை உற்பத்தி மண்டலமாக நாமக்கல் திகழ்கிறது. இந்த மண்டலத்தில் ஏறத்தாழ ஆயிரம் கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு 4 கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 3 கோடிக்கும் அதிகமான முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

முன்எச்சரிக்கைநடவடிக்கை

இந்த நிலையில் கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் அறிகுறி கண்டறியப்பட்டு உள்ள நிலையில், நாமக்கல் கோழிப்பண்ணைகளில் முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக பண்ணைகளின் முகப்பு வாயிலில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்த தண்ணீரை நிரப்பி, அதில் கால்களை கழுவிய பின்னரே தொழிலாளர்களை பண்ணைக்குள் அனுமதிக்கின்றனர். இதேபோல் கோழிகளுக்கும் ‘ஸ்பிரே’ மூலம் மருந்து தெளிக்கின்றனர். சில பண்ணைகளில் தடுப்பூசியும் போடப்பட்டு வருகிறது. கோழிப்பண்ணைகளுக்கு முட்டை, கோழி மற்றும் கோழி எரு ஏற்ற வரும் அனைத்து வாகனங்களும் கிருமி நாசினி கலந்த தண்ணீர் தெளித்த பின்னரே பண்ணைகளுக்குள் அனுமதிக்கப்படுகின்றன. இதுபோன்ற பல்வேறு உயிரியல் பாதுகாப்பு நடவடிக்கைகளை பண்ணை யாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். பெரும்பாலான பண்ணைகளில் வெளி ஆட்கள் நுழைய தடை விதிக்கப்பட்டு உள்ளது. முட்டை கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் அட்டைகளை கிருமிநாசினி கலந்த தண்ணீரில் நன்கு சுத்தம் செய்த பின்னரே பயன்படுத்துகின்றனர். ரத்த மாதிரிகள் சேகரிப்பு இது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள்கூறியதாவது:-

நாமக்கல் மண்டலத்தில் உள்ள அனைத்து கோழிப்பண்ணைகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதிக இறப்பு ஏற்பட்டால் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தி உள்ளோம். இதுதவிர மாதம் ஒன்றுக்கு 100 ரத்த மாதிரிகள் வீதம் சேகரித்து, போபாலில் உள்ள ஆய்வகத்திற்கு அனுப்பி வருகிறோம். இதுவரை நமது மாவட்டத்தில் பறவை காய்ச்சல் அறிகுறிகள் எதுவும் இல்லை. எனவே பண்ணையாளர்கள் யாரும் பீதி அடைய வேண்டாம் என்றனர். இதுவரை வடமாநிலங்களில் மட்டுமே பறவை காய்ச்சல் நோயின் தாக்கம் இருந்து வந்தது. ஆனால் தற்போது முதன்முறையாக கேரளாவில் இதன் தாக்கம் கண்டறியப்பட்டு உள்ளதால், நாமக்கல் கோழிப்பண்ணையாளர்கள் அச்சம் அடைந்து உள்ளனர். குறிப்பாக தமிழகத்தின் முக்கிய வியாபார ஸ்தலமாக கேரளா விளங்குவதால், கோழி மற்றும் முட்டை விற்பனை பாதிக்க கூடும் என்ற அச்சத்தில் பண்ணையாளர்கள் உள்ளனர்.

முட்டைகள்தேங்கும்அபாயம்

இதற்கிடையே கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டு உள்ளதால் அங்கு கோழி மற்றும் முட்டை விற்பனை சரிவடைய தொடங்கி உள்ளது. இதனால் நாமக்கல் மண்டலத்தில் இருந்து கேரளாவுக்கு செல்லும் முட்டையின் அளவும் குறைந்து இருப்பதாக கூறப்படுகிறது. இதே நிலை நீடித்தால் முட்டைகள் தேங்கும் அபாயமும் உள்ளது. மேலும் தற்போது முட்டை ஏற்றுமதி மிக குறைவாக உள்ளநிலையில், கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டு உள்ளதால், அதுவும் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

**<u>தலைவாசல் அருகே இலுப்பநத்தம் சின்ன ஏரி நிரம்பியது விவசாயிகள் சிறப்பு பூஜை</u>**



தலைவாசல் அருகே இலுப்பநத்தம் சின்ன ஏரி நிரம்பியது. இதனால் விவசாயிகள் சிறப்பு பூஜை நடத்தினார்கள். ஏரி நிரம்பியது தலைவாசல் பகுதியில் கடந்த 3 ஆண்டுகளுக்கு பிறகு அண்மையில் பெய்த தொடர்மழையால் இலுப்பநத்தம் சின்னஏரியில் தண்ணீர் நிரம்பியது. இதனால் ஏரியை சுற்றி உள்ள விவசாய நிலங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரவும், விவசாயம் செழிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மகிழ்ச்சி அடைந்த அந்த பகுதி விவசாயிகள் பொங்கல் வைத்தும், கிடா வெட்டியும் சிறப்பு பூஜை நடத்தினார்கள். இந்த பகுதியில் தற்போது பருத்தி, மக்காச்சோளம் ஆகிய பயிர்கள் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. விவசாய பணிகள் சுறுசுறுப்பு தொடர்மழையால் விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் நெல் நடவு செய்யும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது. தலைவாசல் பகுதியில் வெள்ளையூர் ஏரி, பகடப்பாடி ஏரி, கவர்ப்பனை ஏரி ஆகிய ஏரிகளிலும் தண்ணீர் நிரம்பியுள்ளது. இந்த பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விவசாய பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளன. விதைகள், உரங்கள் ஆகியவற்றின் விற்பனையும் இந்த பகுதியில் அதிகரித்து உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>கோகோ சாகுபடி செய்து அதிக வருவாய் ஈட்டும் தேனி விவசாயி</u>**



தேனி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு போதிய மழை யில்லாமல் தென்னை மரங்கள் கருகியது. இதன் காரணமாக தென்னை

விவசாயத்தின் பரப்பளவு சுருங்கி கொண்டு வந்தது. லாரி, டிராக்டர்களில் கொண்டு வரப்படும் தண்ணீரை கூடுதல் விலை கொடுத்து வாங்கி நீர் பாய்ச்ச முடியாமல் சில விவசாயிகள் மரங்களை அழித்து விட்டு மாற்று விவசாயத்தில் ஈடுபட்டனர். இன்னும் சிலர் வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்து விட்டனர். இந்த நிலையில் பெரியகுளம் அருகே கெங்குவார் பட்டியை சேர்ந்த விவசாயி கே.வி.காமராஜ் இவர் தனக்கு சொந்தமான 15 ஏக்கர் தென்னந்தோப்பில் கோகோ சாகுபடி செய்து அதிக வருவாய் ஈட்டி வருகிறார். இது குறித்து 'தி இந்து'விடம் விவசாயி காமராஜ் கூறுகையில், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு வந்தது. என் தோட்டத்திலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டபோது மிகவும் வேதனையடைந்தேன். அந்த நேரத்தில் தோட்டக்கலை துறை அதிகாரிகள் என்னை சந்தித்து தென்னை மரங்களுக்கு ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்ய கோரினர். முதலில் எனக்கு தயக்கமாக இருந்தது. அவர்கள் என்னை உற்சாகப்படுத்தினர். இதனை யடுத்து எனது 15 ஏக்கர் தென்னந்தோப்பில் கோகோ சாகுபடி செய்தேன். ஒரு ஏக்கருக்கு 200 கன்றுகள் நடவு செய்யப்பட்டது. சாகுபடி செய்த 3 ஆண்டுகளில் பலன் கிடைக்கத் தொடங்கியது. இதன் மூலம் சுமார் 40 ஆண்டுகள் வரை பயன்பெற முடியும். தோட்டக்கலை துறையினரால் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 25 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டது. சொட்டு நீர் பாசனத்தின் மூலம் சாகுபடி நடைபெற்று வருகிறது. கோகோ மரத்தில் இருந்து உதிர்ந்து விழுந்து இலைகள் நல்ல இயற்கை உரமாகிறது. தரைப்பகுதியில் காய்ந்த இலைகள் இருப்பதால் ஈரப்பதத்தினை தக்கவைத்துக் கொள்கிறது. வறட்சியை சமாளிக்க இந்த கோகோ சாகுபடியும், தென்னைமரத்திற்கு நல்ல வரப்பிரசாதமாகவும் அமைந்துள்ளது. மார்ச் மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரை சீசன் காலம்

ஆகும். அப்போது விளைச்சல் அதிகமாக இருக்கும். சராசரியாக ஒரு மரத்தில் இருந்து ஒன்று முதல் இரண்டு கிலோ வரை கோகோ கிடைக்கிறது. தற்போது மார்க்கெட்டில் கிலோ ரூ.190 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 400 கிலோ வரை விற்பனை செய்கிறேன். இதனை சந்தைபடுத்துதலும் மிகவும் எளிது கம்பம் பகுதிகளிலும் தற்போது கோகோ சாகுபடி தொடங்கியுள்ளது என்றார். கோகோ சாகுபடி செய்து அதிக வருவாய் ஈட்டி வரும் இவரை 8220627712 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## ஆண்டு முழுவதும் வருமானம் தரும் மரத் தோட்டம்: சாதிக்கும் இரண்டலப்பாறை விவசாயி அமலதாஸ்



“பெத்த பிள்ளை கைவிட்டாலும், வைச்ச பிள்ளை கைவிடாது, ‘’ என வழக்குச் சொல்லாக சொல்வார்கள் நம் முன்னோர்கள். ஒருவர் மரம் வளர்த்தால், அந்த மரம் அவரது வாழ்வின் இறுதிக் காலம் வரை உயிர் மூச்சாக, வாழ்வதாரமாக இருக்கும் என்பதற்கு சிறந்த உதாரணம் திண்டுக்கல் விவசாயி இரண்டலப்பாறை ஏ.அமலதாஸ் வளர்க்கும் மரங்கள்தான். அமலதாஸுக்குச் சொந்தமான 6½ ஏக்கர் விவசாயத் தோட்டம், இரண்டலப்பாறையில் உள்ளது. இவரது தோட்டத்தில் மற்ற விவசாயிகளைப் போல் காய்கறிகள், மலர்கள் உள்ளிட்ட குறுகியகால பயிர்களைப் பயிரிடவில்லை. தோட்டம் முழுவதும் வெறும் தென்னை, கொய்யா, தேக்கு, சப்போட்டா, பலா, மா, எலுமிச்சை மரங்களை நட்டு வைத்துள்ளார். காய்கறிகள், மலர்கள் உள்ளிட்ட மற்ற விவசாயப் பயிர்களுக்கு நீர்ப் பாசனம் அதிகம் தேவை. இந்த பயிர்களிடையே ஊடு

பயிராக எதை நட்டாலும் பிரதான பயிருக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதால், இவர் தன்னுடைய தோட்டத்தில் அனைத்து மரங்களையுமே ஊடு பயிராக நட்டுள்ளார். அதனால், ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு சீசனில் இவர் லட்சக்கணக்கில் வருமானத்தை ஈட்டி வருகிறார். இதற்காக இவர் பராமரிப்பு செலவு பெரிதாக எதுவும் செய்யவில்லை. தண்ணீரை மட்டும் பாய்ச்சுகிறார். அவ்வப்போது செடி, கொடிகளை கூலியாட்களை வைத்து வெட்டி அப்புறப்படுத்துகிறார். தனக்கு கிடைத்த இந்த மரத் தோட்ட விவசாய அனுபவங்களை மற்ற விவசாயிகளிடம் கூறி மரங்களை நடுமாறு விழிப்புணர்வு செய்து வருகிறார். இது குறித்து அமலதாஸ் "தி இந்து'விடம் கூறுகையில், "ஆரம்பத்தில் மற்ற விவசாயிகளைப் போல் நானும் காய்கறிகள் சாகுபடி செய்தேன். தண்ணீர் பிரச்சினை, கூலியாட்கள் சம்பளம், பராமரிப்புச்செலவு என பல பிரச்சினைகளால் லாபம் என எதுவும் கையில் மிஞ்சவில்லை. வெறுத்துபோய், கொய்யா சாகுபடி செய்தேன். தண்ணீர் குறைவாக தேவைப்படும் `லக்னோ 47' ரக கொய்யா செடிகளை குடிமியான்மலையில் வாங்கி வந்து நட்டேன். ஒரு ஏக்கருக்கு 60 மரங்கள் மட்டுமே நட்டேன். இந்த 60 மரங்களுக்கு இடையே ஊடு மரமாக எலுமிச்சை, மா, தென்னை, சப்போட்டா, பலா ஆகிய மரங்களை நட்டேன்.

ஒரு ஏக்கரில் 60 கொய்யா, 20 தென்னை, 60 எலுமிச்சை மற்றும் தேக்கு, பலா, வேம்பு, சப்போட்டா என மரங்கள் உள்ளன. கொய்யா ஆண்டுக்கு இரண்டு சீசன் என்பதால் 9 மாதங்கள் பழம் பறிக்கலாம். ஒரு கிலோ கொய்யாவுக்கு 25 ரூபாய்க்குக் குறையாமல் விலை கிடைக்கிறது. ஒரு மரத்தில் சாதாரணமாக 300 கிலோ கொய்யா கிடைக்கிறது. தென்னையில் 40 நாட்களுக்கு ஒரு முறை காய் வெட்டலாம். பலாமரத்தில் ஆண்டுக்கு ஒரு முறை பாலாப்பழம் கிடைக்கும். எலுமிச்சையில் ஆண்டு முழுவதும் எலுமிச்சை பழங்களைப் பறிக்கலாம். சந்தையில் எலுமிச்சைக்கு

எப்போதுமே மவுசுதான். எங்களுடைய நத்தம் "மா'வுக்கு சொல்லவே வேண்டாம். சந்தையில் கிராக்கிதான். சப்போட்டா, ஆண்டுக்கு ஒரு சீசனிலும், மா மரத்தில் ஆண்டுக்கு இரண்டு சீசனிலும் மகசூல் கிடைக்கிறது. இவை தவிர, இந்த மரங்களைச் சுற்றி வடக்கு தெற்காக இந்த மரங்களைப் பாதுகாக்கும் வகையில் வேலி மரமாக ஒரு ஏக்கருக்கு 20 மரம் வீதம் 400 தேக்கு மரங்களை நட்டேன். இதனால், தோட்டத்துக்கு சூரிய வெளிச்சம் கிடைப்பதில் எந்தச் சிக்கலும் இருக்காது. தேக்கு மரத்தை தோட்டத்துக்கே வந்து வாங்கி செல்கின்றனர். தோட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த மரங்களுக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டால் போதும். மாதந்தோறும் கைநிறைய வருமானம் கிடைக்கிறது. இதற்காக தினசரி காலை ஒரு மணி நேரம்தான் செலவிடுகிறேன். மற்ற நேரங்களில் கடை வியாபாரத்தைப் பார்க்கிறேன். எனக்கு நேரமும் அதிகம் கிடைக்கிறது, இரட்டை வருமானமும் கிடைக்கிறது" என்றார்.

## **பறவைக் காய்ச்சல் நோய் தீவிரம் எதிரொலி: கேரளாவில் இருந்து கோழி, முட்டைகளை கொண்டுவர திடீர் தடை**



கேரளாவில் பறவைக்காய்ச்சல் நோய் தீவிரமாக பரவியுள்ளதால் அங்கிருந்து கோழி, வாத்து, முட்டை மற்றும் அதன் சார்புப் பொருட்களை தமிழகத்துக்குள் கொண்டு வர அரசு தடை விதித்துள்ளது. எல்லையோர சோதனைச் சாவடிகளில் வாகனங்களை கண்காணிக்க 800 தனிப்படைகள் அமைக்கப் பட்டுள்ளன. கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டத்தில் கடந்த சில நாட் களில் சுமார் 17 ஆயிரம் வாத்துகள் இறந்தன. இவற்றின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சோதனைக்கு அனுப்பப்பட்டது. பறவைக்

காய்ச்சல் நோய் ஏற்பட்டு வாத்துகள் இறந்ததை மத்திய அரசு உறுதி செய்து, அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்நிலையில், கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுப்பதற்காக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர், தலைமைச் செயலர் மோகன் வர்கீஸ் சுங்கத், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் விஜயகுமார், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர் க.குழந்தைசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர். கேரளாவில் இருந்து பறவைகளை தமிழகத்துக்கு கொண்டுவர தடை விதிப்பது உள்ளிட்ட பல்வேறு முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இதுபற்றி அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு: தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் நோய் எதுவும் இல்லை. என்றாலும், இந்நோய் எளிதில் பரவக்கூடியது என்பதால், கேரளாவில் இருந்து தமிழகம் வரும் கோழிகள் மற்றும் கோழியினம் சம்பந்தப்பட்ட பொருட்களை மாநில எல்லைகளில் உள்ள சோதனைச்சாவடிகள் மூலம், சோதனை செய்து தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்ப வேண்டும். கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு வரும் அனைத்து வாகனங்களையும் மாநில எல்லை சோதனைச் சாவடிகளில் நிறுத்தி, அவற்றின்மீது கிருமி நாசினி தெளிக்க வேண்டியது அவசியமாகும். மண்டல இணை இயக்குநர்கள், சோதனைச் சாவடிகளில் இப்பணிக்கான குழுக்களை தயார் நிலையில் வைத்திருப்பர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங் களிலும், குறிப்பாக கேரள எல்லையை ஒட்டிய மாவட்டங்களில் கண்காணிப்புப் பணி மேற்கொள் ளப்படும். நோய்த் தடுப்பு நடவடிக்கை

களை மேற்கொள்ள 800 விரைவு செயலாக்கக் குழுக்கள் அமைக் கப்படும். சைதாப்பேட்டை மத்திய நோய் ஆய்வுக் கூடத்தில், 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது. **இதன் தொலைபேசி எண். 044 24339097. அலைபேசி எண். 9445032504.**

**<u>பறவைக் காய்ச்சலால் பீதியடையத் தேவையில்லை: கேரள முதல்வர் உம்மன் சாண்டி பேட்டி</u>**

கேரள மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் மூன்று மாவட்டங்களில் மட்டுமே உள்ளது. அந்த வைரஸ் பறவைகளை மட்டுமே பாதிக்கும், மனிதர்களைப் பாதிக்காது என கண்டறியப்பட்டுள்ளதால் பீதியடையத் தேவையில்லை என கேரள முதல்வர் உம்மன் சாண்டி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர வைக் கூட்டத்துக்குப் பிறகு அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:

உலக சுகாதார அமைப்பின் நெறிமுறைகளின்படி, சாத்திய முள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. போதுமான தடுப்பு மருந்துகள் கிடைக்கின்றன. கூடுதலாக மத்திய அரசிடமிருந்து தருவிக்கப்படு கின்றன. இதில் சிறு கவனக்குறை வுக்கும் வாய்ப்பளிக்க விரும்ப வில்லை. வாத்து வளர்ப்போருக்கு கூடுதல் இழப்பீடு வழங்க ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். ஆழப்புழா, கோட்டயம், பத்தனம்திட்டா ஆகிய மாவட்டங் களில் எச்-5 ஏவியன் இன்புளூ யன்சா வைரஸ் பரவியிருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 12 கிராமங்களில் உள்ள பறவைகளை அரசு அலு வலர்கள் அழித்து வருகின்றனர். மத்திய அரசு 2 நபர் குழுவை கேரளத்துக்கு அனுப்பி வைத் துள்ளது. கடந்த 9-ம் தேதி வாத்துகள் இறந்த தகவல் வெளியானது. சரியான சமயத் தில் செயல்பட மாநில அரசு

தவறிவிட்டது என எதிர்க்கட்சித் தலைவர் அச்சுதானந்தன் குற்றம்சாட்டியுள்ளார்.

**இனி விதைகளையும் பட்டுவாடா செய்வார் தபால்காரர்_:**

**விவசாயிகளுக்காக மத்திய அரசின் புதிய முயற்சி_**

இனி தபால்களுடன் விவசாயி களுக்கு தேவையான விதை களையும் தபால்காரர் பட்டுவாடா செய்வார். இந்த புதிய திட்டம் மத்திய வேளாண்மைத் துறை சார்பில் நாட்டின் 14 மாநிலங்களில் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் நலனுக்காக, மத்திய அரசு விவசாயப் பல்கலைக்கழகங்கள் மூலம் தரமான விதைகளை சற்று குறை வான விலையில் வழங்குகிறது. ஆனால் விதைகளை வழங்கும் விவசாயப் பக்கலைக்கழகங்கள் அல்லது ஆய்வகங்கள் தொலை தூரத்தில் இருப்பதால், விவசாயிகளால் நேரில் சென்று விதைகளைப் பெற முடிவதில்லை. இதனால் அதிக தொகையை கூரியர் நிறுவனங்களுக்காக செலவிட வேண்டி உள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், மத்திய அரசே முன் வந்து விவசாயிகளுக்கு விதை களை பட்டுவாடா செய்யும் பணியை மேற்கொள்ள இருக் கிறது. மத்திய அரசின் இந்திய வேளாண் ஆய்வு மையங்கள் மூலமாக இந்த பணி நடைபெறும். இதுகுறித்து, ‘தி இந்து’விடம் மத்திய வேளாண் மைத் துறை அமைச்சக வட்டாரங்கள் கூறு ம்போது, “விவசாயி களுக்காக தபால் துறையின் உதவியுடன் ஒரு புதிய திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. இதன்படி, தபால்காரர் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் வழங்கும் விதைகளை விவசாயிகளிடம் கொண்டு போய் ஒப்படைப்பார். முதல் கட்டமாக நாட்டின் 14 மாநிலங்களில் உள்ள 100 மாவட்டங்களில் இந்த திட்டம் அமலாகும். இந்த மாநிலங்களின் பட்டியல் இன்னும் முடிவாக

வில்லை” என்றனர். இந்த திட்டம் சோதனை அடிப் படையில் மத்தியப் பிரதேசத்தின் ஷிவ்புரி, உ.பி.யின் சீதாபூர், பிஹாரின் பக்ஸர், ராஜஸ்தானின் சிரோஹி மற்றும் ஜம்மு-காஷ்மீரின் ஜம்மு ஆகிய மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்துக்கு விவசாயிகள் மத்தி யில் நல்ல வரவேற்பு கிடைத் துள்ளது. மத்திய அரசின் மண் வள ஆய்வகங்கள் மூலம் குறிப் பிட்ட பகுதிகளில் விளையும் விதை கள் என்ன என்பது அடையாளம் காணப்பட்டு அதற்கேற்ப விதைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. முதல் கட்டமாக இலவசமாக விவசாயிகளுக்கு விதைகள் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதன்மூலம் விவசாயிகள் பலன் அடையத் தொடங்கியவுடன், அதற்கான தபால் செலவை அவர்களிடமே வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## மரபணு மாற்றப்பட்ட பயிர் களப்பரிசோதனைக்கு தடையில்லை_: மத்திய அமைச்சர் தகவல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை வயல்வெளிகளில் நேரடி களப்பரிசோதனை செய்வ தற்கு மத்திய அரசோ அல்லது உச்ச நீதிமன்றமோ தடை விதிக்க வில்லை என மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் மக்களவையில் தெரிவித்தார். மக்களவை யில் கேள்வி நேரத்தின் போது, இதுதொடர்பான கேள்விக்கு அமைச்சர் ஜவடேகர் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

தேச நலன்கருதி அனைத்து வித முன்னெச்சரிக்கை நடவடிக்கை களுடன் மரபணு மாற்ற பயிர் ஆய்வு மற்றும், நேரடி களப் பரிசோதனை செய்வதற்கு அனு மதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தேதி வரை, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை நேரடி களப்பரிசோதனை செய்வதற்கு மத்திய அரசோ, உச்ச நீதிமன்றமோ தடை விதிக்கவில்லை. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, இவ்விவகாரம் தொடர்பாக 6 பேர் கொண்ட தொழில்நுட்ப

நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இரண்டு இறுதி அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. 5 உறுப்பினர்கள் இணைந்து ஒரு இறுதி அறிக்கையையும், 6-வது உறுப்பினரான ஆர்.எஸ். பரோடா மட்டும் தனியாக ஓர் இறுதி அறிக் கையையும் சமர்ப்பித்துள்ளனர். இரு அறிக்கைகளுமே, இந்தியா வில் உயிரி பாதுகாப்பு (பயோ- சேஃப்டி) ஒழுங்குமுறைகளை மேம் படுத்துவதற்கான ஆலோசனை களை அளித்துள்ளன. ஐவர் குழு அளித்துள்ள அறிக்கை, அனைத்து பரிந்துரைகளையும் அமல்படுத் தும் வரை மரபணு மாற்றப்பட்ட விதை நேரடி களப்பரிசோதனைக் கான அனுமதியை நிறுத்தி வைக்க பரிந்துரைத்துள்ளது. ஆறாவது உறுப்பினர், “ஜிஇஏசி குழு களப் பரிசோதனை தொடர்பாக அளித் துள்ள விதிமுறைகளே போது மானது” எனக் குறிப்பிட்டுள்ளார். அனைத்து நேரடி களப்பரிசோ தனைகளுமே, கடுமையான விதி களுக்கு உட்பட்டே நடத்தப்படு கின்றன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். ஆர்.எஸ்.எஸ். தொடர்புடைய ஸ்வதேசி ஜக்ரான் மஞ்ச், பாரதிய கிசான் சங்கம் ஆகியவை இப் பரிசோதனைக்கு தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்தி வரு கின்றன. இதுதொடர்பாக அச்சங்கங் களின் பிரதிநிதிகள் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரை கடந்த ஜூலை மாதம் சந்தித்துப் பேசினர். அரிசி, கத்திரிக்காய், கடுகு, பருத்தி, கொண்டைக் கடலை ஆகியவற்றை நேரடி களப்பரிசோதனை செய்வதற்கு ஜிஇஏசி ஒப்புதல் அளித்தது குறிப்பிடத்தக்கது.